# ஜென் கதைகள்

தொகுப்பு: சுப. ரத்தினகிரி. (srathinagiri@gmail.com/srgiri@dataone.in)

1. நிலாப்பரிசு

ஒரு ஜென் குரு ஒரு மலையடிவாரத்தில் தான் மட்டும் தங்கியிருந்தார். ஒரு திருடன் வந்து அங்கே ஒன்றுமில்லாதது கண்டு கோபமுற்றான். ஜென் குருவோ அவனுக்காக வருத்தப்பட்டு, தனது ஒரே ஆடையையும் அவனுக்குக் கொடுத்து விட்டார். அவன் சென்ற பிறகு நிர்வாணமான நிலையில் சந்திரனைப் பார்த்துக் கொண்டே நினைத்தாராம். "அடடா! இந்த அழகிய நிலவை அவனுக்கு வழங்காமல் போய்விட்டோமே!".

2. பார்வை

ஒரு ஜென் துறவி மறைந்த பின் அவர் குடிலுக்கு அருகில் குடியிருந்த ஒரு குருடர் இவ்வாறு கூறுகிறார்:

"எனக்கு பார்வையில்லாததால் அனைத்தையும் மற்றவர்களின் குரல் மூலமே உணர்வேன். ஒருவருக்கு நல்லது நடந்து அதை மற்றவர்கள் பாராட்டுவதில் சிறு பொறாமை உணர்வு கட்டாயம் இருக்கும். ஒருவருக்கு கெடுதல் நடந்து மற்றவர்கள் வருத்தப்படும் போது சிறு சந்தோச உண்ர்வு கட்டாயம் இருக்கும். ஆனால் இந்த மறைந்த துறவி சந்தோசமாக இருக்கும் போது சந்தோசமும், வருத்தமாக இருக்கும் போது வருத்தமும் தவிர நான் அவரது குரலில் வேறெதுவும் உணர்ந்ததில்லை."

3. திருட்டுச் சீடன்

ஒரு ஜென் துறவி தியானத்தில் இருக்கையில் ஒரு திருடன் வந்து அவரைப் பயமுறுத்தினான். அவரோ சிறிதும் கலங்காமல், "உனக்குத் தேவையானது அந்தப் பெட்டியில் உள்ளது. வேண்டுமானால் வேண்டும் வரை எடுத்துக் கொள்" என்றார். அவனும் மீதி கொஞ்சம் வைத்து விட்டு பணத்தை எடுத்துக் கொண்டு வெளியேற நினைக்கையில் துறவி,

"பொருளை எடுத்தால் அவருக்கு நன்றி சொல்ல வேண்டாமா?" என்று கேட்க, அவனும் நன்றி சொல்லி விட்டு சென்றுவிட்டான். பின்பு பிடிபட்டுக் கொண்டான். சாட்சிக்கு துறவியை வரவழைத்தவுடன் அவர் சொன்னார், "இவருக்கு நான் தான் பணத்தையும் பொருட்களையும் கொடுத்தேன். அவர் அதற்கு நன்றி கூடத் தெரிவித்தார்" என்றார். அத்திருடன் பின்னாளில் சிச்சிரி கோஜுன் என்னும் அத்துறவியின் மிகச் சிறந்த சீடரானார்.

4. குருவின் (சே)தேவை

ஒரு ஜென் துறவிக்கு நிறைய சீடர்கள் இருந்தனர்.

ஒரு சீடன் திருடும் போது பிடிபட்டுக் கொண்டான். அவனை உடனே வெளியனுப்புமாறு மற்ற சீடர்கள் கேட்டுக் கொண்டனர். துறவியோ கண்டுகொள்ளவே இல்லை.

மீண்டும் ஒரு முறை அவன் திருடும் போது பிடிபட்டான். அப்போதும் துறவி அதைக் கண்டுகொள்ளவில்லை.

உடனே மற்ற சீடர்கள் அனைவரும் ஒரு மனு எழுதி அச்சீடனை வெளியே அனுப்பாவிட்டால் தாங்கள் அனைவரும் வெளியேறப்போவதாக எழுதி அனைவரும் கையொப்பமிட்டிருந்தனர்.

அதைப் படித்த துறவி அன்பு கனிந்த குரலில் கீழ்க்கண்டவாறு கூறினாராம்:

"சீடர்களே நீங்கள் அனைவரும் எத்துணை புத்திசாலிகள் என்பதை நினைத்துப் பெருமையடைகிறேன். உங்களால் எது சரி என்றும் எது தவறு என்றும் அறிய முடிகிறதே! நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் இந்த சீடருக்கு என்னைத் தவிர வேறு யார் எது சரி என்றும் எது தவறு என்றும் எவ்வாறு தவறுகளில் இருந்து சரியாகப் பயில வேண்டும் என்பதையும் சொல்லித் தருவார்கள்?"

அப்போது அந்த சீடர் கண்களில் இருந்து கண்ணீர் பொலபொலவென வழிந்ததுடன் அதன் பிறகு அவர் திருடவேயில்லை.

அந்த ஜப்பானிய ஜென் துறவியின் பெயர் பேங்கீய் ஆகும்.

5. <u>மௌன விரதம்</u>

ஒரு ஜென் குடிலில் தற்போது சேர்ந்த 4 சீடர்கள் இருந்தனர். நால்வரும் இணைந்து ஒரு வாரத்துக்கு மௌன விரதம் இருப்பது என முடிவு செய்தனர். நல்லநாள் பார்த்து விரதத்தை ஆரம்பித்தனர்.

மாலையாயிற்று. விளக்கில் எண்ணை தீரும் போல் இருந்தது. விளக்கு அணையும் நேரத்தில் முதல் சீடர் வாய் திறந்து, "இந்த விளக்கை யாரும் சரி செய்யக் கூடாதா?" என்று தன் விரதத்தை முடித்துக் கொண்டார்.

இரண்டாமவர், "நாம் யாரும் பேசக் கூடாது என்பதை மறந்து விட்டாயா?" என்று கடிந்து கொண்டார்.

மூன்றாமவர், "நீங்கள் இருவரும் முட்டாள்கள். விரதத்தைப் பாழடித்துவிட்டீர்களே" என்று தனது விரதத்தை முடித்தார்.

நான்காமவர் முத்தாய்ப்பாக, "நான் தான் கடைசி வரை பேசவில்லை பார்த்தீர்களா!" என்று தனது கடுமையான விரதத்தினை முடித்துக் கொண்டார்!

6. <u>நடைமுறை அற்புதம்</u>

ஒருமுறை புத்த சந்நியாசி ஒருவர் பேங்கீய் துறவியைப் பார்க்க வந்தார். அந்த புத்த சந்நியாசிக்கு தான் தினமும் புத்தரின் நாமாவை நாள்தோறும் ஓதுவதாக கர்வம் வந்தது. ஜென்னைப் பார்த்ததும் சந்நியாசி "ஐயா! புத்தர் ஒருமுறை ஒரு கையில் தூரிகையை வைத்துக் கொண்டு ஆற்றின் மறுகரையிலிருக்கும் ஒரு காகிதத்தில் ஒரு பெயரை எழுதினாரே அது போல் உங்களால் ஏதேனும் அற்புதம் நிகழ்த்த இயலுமா?" என்றார். அதற்கு ஜென் துறவி கூறினார், "எனக்குத் தெரிந்த அற்புதமெல்லாம் பசிக்கும் போது புசிப்பதும், தாகமெடுக்கும் போது நீர் அருந்துவதும் தான்!".

7. <u>ஒரு துளி</u>

ஒரு ஜென் துறவி குளிப்பதற்கு தண்ணீர் கொண்டு வருமாறு சீடரைப் பணித்தார். சீடரும் தண்ணீரை ஒரு வாளியில் கொண்டு வந்து வைத்தார். குரு குளித்துவிட்டு சென்றவுடன் சீடர் வாளியில் இருந்த மீதி நீரைக் கீழே ஊற்றினார். அதை அங்கிருந்து பார்த்த குரு, அங்கிருந்து கொண்டே, "இந்த ஒரு துளி நீரை வீணாக்க உனக்கு யார் உரிமை கொடுத்தார்கள்?" என்றார். உடனே சீடருக்கு ஞானம் வந்து விட்டதாம். அவர் பேரை அப்போதே டேகிசூயி என்று மாற்றிக்கொண்டார். அதன் அர்த்தம் "ஒரு துளி" என்பதாகும். அவரின் குருவின் பெயர் - கிசான்.

8. <u>இருப்பதில் சிறந்தது</u>

பேன்சன் என்னும் ஜென் துறவி சந்தையில் நடந்து செல்கையில் ஒரு கசாப்புக்கடையில் நடைபெற்ற விவாதம் ஒன்றைச் செவி மடுக்க நேர்ந்தது. மாமிசம் வாங்க வந்தவன் "உன்னிடம் உள்ள மாமிசத்திலேயே இருப்பதிலேயே நல்லதை எனக்குக் கொடு" என்றான். கசாப்புக் கடைக்காரனோ, "என்னிடம் உள்ள அனைத்துமே சிறந்தது தான்" என்றான். அக்கணமே துறவி ஞானமடைந்தாராம்.

9. <u>எங்கிருந்து வந்தது?</u>

ஒருவன் ஒரு ஜென் துறவியைக் காண வந்தான். அவரிடம், "இவ்வுலகில் இப்போது புத்தர் இருக்கிறாரா? இல்லையே? எதுவுமே இல்லை என்பதில் தான் இருக்கிறது. அனைத்துமே வெற்றிடம் தான். யாரும் எதுவும் கொடுப்பதில்லை. எதுவும் பெறுவதில்லை." என்றான்.

உடனே அந்த துறவி அவனை தன்னிடமிருந்த ஒரு குச்சியால் ஒரு அடி அடித்தார்.

அவனுக்குக் கோபம் வந்து விட்டது.

"எதுவுமே இல்லை என்றால் உனது கோபம் எங்கிருந்து வந்தது அப்பனே!", என்று கேட்டார் துறவி.

10. <u>மன்னிக்க மாட்டாயா?</u>

ஒரு ஜென் துறவி தன் சீடரை மடத்தில் இருத்தி விட்டு வெளியே சென்றிருந்தார். மதிய நேரம். உண்ட மயக்கம் தொண்டருக்கும் உண்டல்லவா? நமது சீடருக்கும் இருந்தது. அசந்து உறங்கி விட்டார். வெகு நேரம் கழித்து குரு வந்து தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்த சீடரின் கால்களை மிதித்து விட்டார். பதறி எழுந்த சீடரைப் பார்த்து அந்தத் துறவி கவலையுடன், "என்னை மன்னிக்க மாட்டாயா? என்னை மன்னிக்க மாட்டாயா?" என்று இரங்கிக் கேட்டுக் கொண்டார். சீடருக்கு அப்போதே ஞானம் வந்தது. அவர் குருவாகும் போது அவரது சீடர்களை மதியம் உறங்க வைப்பதுடன், அவர்களுக்கு எந்த இடைஞ்சலும் வராதிருப்பதே தன் பணியாக ஆற்றிக் கொண்டிருந்தார். அவர் பெயர் ஷோயன் ஷாகு.

11. <u>நன்கொடையும் நன்றியும்</u>

ஒரு ஜென் துறவியின் மடத்துக்கு இடம் போதவில்லை என்று கட்டிடம் கட்ட ஒரு பணக்காரர் 50 பவுன் தங்கக் காசுகளை அன்பளிப்பாக வழங்கினார். துறவியோ, "சரி இருக்கட்டும்" என்று வாங்கிக் கொண்டார். நன்கொடையாளரோ துறவி நன்றி சொல்வார் என்று நின்று கொண்டே இருந்தார். துறவி நன்றி சொல்லவே இல்லை. பணக்காரர் மெல்ல, "இதில் 50 பவுன் இருக்கிறது" என்று சொல்லி விட்டு, "நான் பணக்காரனாக இருந்த போதும் கூட 50 பவுன் என்பது ஒரு பெரிய தொகை தான்" என்றார். துறவியோ, "நான் நன்றி சொல்ல வேண்டுமா என்ன?" என்று கேட்க அவரோ, "சொன்னால் என்ன?" என்று கேட்டார். துறவி, "நன்றியுடையவர்களாக இருக்க வேண்டியவர்கள் கொடுத்தவர்களே ஒழிய வாங்கியவர்கள் இல்லை" என்றார்.

12. <u>மௌன உபதேசம்</u>

ஷோயிச்சி என்றொரு ஜென் துறவி இருந்தார். அவருக்கு நிறைய சீடர்களும் இருந்தனர். அவர் டோஃபுக்கு என்னும் ஆலயத்தில் இருந்து தனது உபதேசங்களை வழங்கினார். உபதேசம் என்றால் வேறொன்றுமில்லை 24 மணி நேரமும் மௌனமாக இருத்தல். இது ஒரு நாளல்ல பல நாட்களல்ல பல ஆண்டுகளாக இப்படி இருந்தது. திடீரென்று ஒருநாள் அந்த ஆலயத்தில் மணி ஒலி கேட்க ஆரம்பித்தது.

அந்த ஊர்க்காரர்கள் அனைவரும் ஷோயிச்சி காலமாகி விட்டார் என்பதை உணர்ந்து கொண்டனர்.

13. <u>நகர்வலம்</u>

ஒரு ஜென் துறவியின் சீடன் ஒருவன் எப்போதும் நடு இரவில் ஏணியை வைத்து சுவரேறிக் குதித்து ஊரைச் சுற்றுவதை வழக்கமாக வைத்திருந்தான். ஒருநாள் அதைக் கவனித்துவிட்ட துறவி அவன் சென்ற உடன் ஏணியை எடுத்துவிட்டு அந்த இடத்தில் தான் நின்று கொண்டார். மீண்டும் வரும் போது அவன் சரியாக துறவியின் தலையில் மிதித்து உள்ளே இறங்கினான். இறங்கியவுடன் குருவைப் பார்த்து வெலவெலத்துப் போனான். குருவோ, "வெளியில் எவ்வளவு பனி விழுகிறது? ஜலதோஷம் பிடித்துக் கொண்டுவிடாமல் பார்த்துக் கொள்" என்றார். அச்சீடரே பின்னாளில் அம்மடத்திலேயே சிறந்த சீடரானார்.

14. <u>அப்படியா</u>?

ஒரு ஊரில் ஒரு ஜென் துறவி இருந்தார். அவர் இடத்துக்கு அருகில் ஒரு அழகான பெண்ணும் தன் தாய் தந்தையருடன் வசித்து வந்தாள். ஒரு ஆண்டு அவள் தாய் தந்தையர் வேறொரு நாட்டுக்கு போய்விட்டு வந்து பார்க்கையில் அவள் கையில் ஒரு குழந்தை இருந்தது. யார் உன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியது என்று கேட்கவும் அவள் நம் துறவியைக் கையைக் காட்டினாள். துறவியைக் கடிந்து கொண்ட அவள் பெற்றோர், குழந்தையை நீர் தான் வளர்க்க வேண்டும் என்றனர். அதற்கு துறவி, "அப்படியா?" என்றார். குழந்தையைத் தாமே வளர்த்தார். ஆறு மாதங்கள் குழந்தைக்கான பாலைக் கூட பிச்சையெடுத்தே ஊட்டுவார். பொறுக்க இயலாத அந்தப் பெண் ஒரு நாள் தமது பெற்றோரிடம் குழந்தையின் தந்தை ஒரு மீன் பிடிப்பவன் என்று ஒப்புக் கொண்டாள். மிகவும் வருத்தத்துடன் மன்னிப்புக் கேட்ட அந்தப் பெற்றோரிடம் குழந்தையை ஒப்படைத்து விட்டு துறவி பேசிய வார்த்தை, "அப்படியா?".

15. <u>உண்மையான மகிழ்ச்சி</u>

ஒரு ஜென் துறவியைச் சந்திக்க ஒரு பணக்காரர் வந்திருந்தார். துறவியிடம் தாம் தம் வழித்தோன்றல்களுடன் மகிழ்ச்சியாக வாழ ஒரு

வழி சொல்லுமாறு வேண்டிக் கொண்டார். துறவியும் ஒரு ஓலையை எடுத்து "தந்தை இறப்பார். மகன் இறப்பான். பேரன் இறப்பான்." என்று எழுதிக் கொடுத்தார். பணக்காரருக்கு கடும் கோபம் வந்தது. "என்ன இது? வாழ்வைப் பற்றிக் கேட்டால் சாவைப் பற்றி சொல்கிறீர்களே?", என்று கேட்டார். துறவியோ சிரித்துக் கொண்டே, "வாழ்விற்குத் தான் வழி சொல்லி இருக்கிறேன். நீங்கள் இறக்கும் முன் உங்கள் மகனோ, உங்கள் பேரனோ இழந்தால் அது மகிழ்ச்சி தருமா? எனவே உண்மையான மகிழ்ச்சி என்பது இயற்கையின் வழி வாழ்ந்து இயற்கையாகவே இறப்பது", என்றார் ஷெங்காய் என்றழைக்கப்பட்ட அந்த ஜென் துறவி.

16. <u>கையிலே வேலை வாயிலே உணவு</u>

ஹியாகுஜோ, என்னும் சீன ஜென் துறவி தனது தள்ளாத வயதிலும் தோட்டத்தைப் பராமரிப்பது, மடத்தின் தூய்மையைப் பேணுவது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்தார். ஒருநாள் அவரது வயோதிகத்தையும், அவர் கஷ்டப்படுவதையும் பொறுக்காத அவர் சீடர்கள் அவரது கருவிகளை ஒளித்து வைத்துவிட்டனர். அன்று முதல் குரு சாப்பிடவே இல்லை. இரண்டு நாள் கழித்து சீடர்கள் வருத்தத்துடன் அந்தக் கருவிகளைத் திருப்பியளித்தனர். அன்றே மீண்டும் சாப்பிட ஆரம்பித்த குரு, அன்று மாலை சிரித்துக் கொண்டே, "வேலை இல்லையேல் உணவும் இல்லை" என்ற தமது போதனையை அளித்தார்.

17. <u>கோப்பையின் வாழ்வு</u>

இக்கியூ என்னும் துறவி சிறு வயதிலேயே அறிவுக் கூர்மையுடன் இருந்தார்.

அவரது குரு மிக அரியதாக வைத்திருந்த டீ கோப்பையை உடைத்து விட்டார் இக்கியூ. குரு வந்ததும், "ஏன் மனிதர்கள் சாக வேண்டும்?" என்று கேட்டார் இக்கியூ. அவர் குருவோ, "இவ்வுலகில் உள்ள அனைத்திற்குமே வாழ்நாள் என்று ஒன்று உண்டு. அது முடிந்ததும் மரணம் சம்பவித்தே ஆகும். இதற்கு யாருமே தப்பிக்க முடியாது. பிறப்பு என்று ஒன்று இருந்தால் இறப்பும் நிச்சயமாக உண்டு." என்றார். இக்கியூ தலையாட்டிக் கொண்டே," உங்கள் டீ கோப்பைக்கு வாழ்நாள் முடிந்து விட்டது குருவே!" என்றார்.

18. <u>சீனக் கவிதை</u>

சீனக் கவிதையைப் பற்றி ஒரு மடத்தில் பேச்சு வந்தது. துறவி ஒரு பழங்கால ஜப்பானிய கவிஞரின் கவிதையைப் பற்றி சொல்ல ஆரம்பித்தார். ஆரம்பிக்கும் முன் சீனக் கவிதைகளின் இலக்கணத்தைப் பற்றி சொன்னார். "சீனக் கவிதைகள் 4 வரிகள் கொண்டதாக இருக்கும். முதல் வரி அறிமுக வரி. இரண்டாம் வரி முதல் வரியின் தொடர்ச்சியாகும். மூன்றாம் வரி முற்றிலும் மாறுபட்ட வரியாக இருக்க வேண்டும். நான்காம் வரி முதல் இரண்டு வரியையும், மூன்றாம் வரியையும் இணைக்கும் வரியாக இருக்கவேண்டும்", என்று சொல்லிவிட்டு கீழ்க்கண்ட சீனக் கவிதையைச் சொன்னார்.

*க்யோட்டோ பட்டு வியாபாரிக்கு இரு மகள்கள்;*
*மூத்தவள் இருபது; இளசு பதினெட்டு.*
*வீரன் கத்தியால் கொல்லுவான்,*
*ஆனால் இப்பெண்கள் கண்களால்.*

19. <u>விலையும் தலையும்</u>

ஒரு ஜென் துறவியிடம் ஒரு மாணவன் "இந்த உலகில் விலை மதிப்பில்லாதது எது?" என்றான். துறவியும், "ஒரு இறந்த பூனையின் தலை" என்றார். "ஏன்?" என்று சீடன் கேட்டான். அதற்கு துறவி, "அதற்கு எந்த விலையும் மனிதர்களால் சொல்ல முடியாது" என்றார்.

20. <u>அறிவுரைகள் 12</u>

ஜென்கெட்சூ என்னும் ஜென் துறவி தமது சீடர்களுக்கு அறிவுரையாக கீழ்க்கண்ட வாசகங்களை அருளினார்.

1. உண்மையான ஜென் என்றால், இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டே இவ்வுலகத்தின் ஒரு தூசியின் மீது கூட பற்று வைக்காதவனாக இருக்க வேண்டும்.

2. அடுத்தவர்கள் நல்லது செய்தால் அதைப் போல நாமும் செய்ய வேண்டும் என்று மனதுக்கு ஆணையிடுங்கள். அடுத்தவர் தவறு செய்தால் அதைப் போல் நாம் செய்யாமல் இருக்க வேண்டும் என்று

உங்கள் மனதுக்கு அறிவுரை சொல்லுங்கள்.

3. ஒரு இருட்டறையில் இருந்தாலும் உங்கள் முன் உங்களுக்குப் பிடித்த ஒரு விருந்தாளி இருப்பது போலவே உணருங்கள். உங்கள் உண்மையான தன்மை தவிர எந்த உணர்ச்சியையும் அதிகப் படுத்தி காட்டாதீர்கள்.

4. ஏழ்மை உங்கள் சொத்து. அதை சொகுசு வாழ்க்கைக்கு எக்காலத்திலும் பரிவர்த்தனை செய்து விடாதீர்கள்.

5. முட்டாளாகத் தோன்றும் ஒருவன் முட்டாளாக இல்லாமல் இருக்கலாம். தனது ஞானத்தை தனக்குள் கவனமாக பாதுகாத்துக் கொண்டிருக்கலாம்.

6. ஞானம் என்பது சுய கட்டுப்பாட்டினால் தானாக வருவது. ஏதோ வானத்தில் இருந்து உங்கள் கைகளில் வந்து விழுவதில்லை.

7. பண்பே ஞானம் அடைவதின் முதல் படி. உங்களை நீங்களே அறிமுகப்படுத்திக் கொள்வதற்கு முன் அவர்களே உங்களைப் பற்றி தெரிந்து கொள்ளட்டும்.

8. ஒரு மேலான இதயம் தன்னை எப்போதும் முன்னிறுத்துவதில்லை. அதன் வார்த்தைகள் அடிக்கடி வருவதில்லை. நவரத்தினங்களைக் காட்டிலும் அவை மதிப்பு மிக்கவை.

9. ஒரு சிறந்த ஜென் துறவிக்கு எல்லா நாட்களும் அதிர்ஷ்ட நாட்களே. காலத்தை அவன் கடந்து செல்ல விடுவதில்லை. அதனுடனேயே நடக்கிறான். புகழோ இழிவோ அவனை அசைக்க முடிவதில்லை.

10. திருத்து. உன்னை மட்டும். அடுத்தவர்களை அல்ல. சரியையும், தவறையும் எக்காலத்திலும் விவாதிக்காதே.

11. சில சரியான விஷயங்கள் பல தலைமுறைகளாக தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. நூறாண்டுகளுக்குப் பின்னர் கூட ஒரு விஷயத்தின் சரியான கோணம் புரிந்து கொள்ளப்படும். எனவே தற்காலிகமாக நீ அதைத் தூக்கி நிறுத்தத் தேவையில்லை.

12. காரணத்தோடு வாழுங்கள். பலன்களைப் பற்றி கவலைப்படாதீர்கள். அதை இந்த பேரண்டம் கவனித்துக் கொள்ளும். ஒவ்வொரு நாளையும் சமாதானமான முறையில் வழிநடத்துங்கள்.

21. <u>உண்ண வைத்த பசி</u>

பேங்கீய் என்னும் ஜென் துறவியின் கீழ் பல சீடர்கள் இருந்தனர். அவர்களுள் டைரியோ என்னும் சீடனும் இருந்தான். அவன் நன்கு சமைப்பான். அவனுக்கு வயதான தன் துறவியைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று மிக்க ஆசை. ஒரு முறை சோயா பீன்சுடன், கோதுமை மற்றும் பல பொருட்கள் கலந்து மிகச் சுவையான பதார்த்தம் ஒன்றைத் தயாரித்து அனைவருக்கும் வைக்கும் போது குருவுக்கு மட்டும் சிறிது அதிகம் வைத்தான். குரு கோபத்துடன் அவனை அழைத்து, "நான் சாப்பிடக் கூடாது என்று நினைத்தாயோ?" என்று சொல்லிவிட்டு அவரது அறைக்குள் சென்று கதவை அடைத்துக் கொண்டார்.

சீடனோ வருத்தத்துடன் அவர் அறைக் கதவுக்கு வெளியில் நின்று மன்னித்துக் கொள்ளும் படி வேண்டிக் கொண்டான். பதிலே காணோம். மூன்று நாட்கள் ஆகின. கதவே திறக்கப்படவில்லை.

கடைசியில் குருவுக்கு பலத்த குரலில், "நீங்கள் சாப்பிடாமல் வேண்டுமானால் இருங்கள். உங்கள் இளஞ் சீடனும் பசியுடன் தான் இருப்பான் என்பதை மறந்து விடாதீர்கள்!" என்று ஒரு வாக்கியம் கேட்டது. அந்த விநாடியே கதவு திறக்கப்பட்டது.

குரு சீடனிடம், "அனைவருக்கும் கிடைக்கும் உணவே எனக்கும் கிடைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நீ குருவாகும் போதும் இதை மறக்காதே!" என்றார்.

22. <u>ஜென்னும் பயமும்</u>

குஸூடா என்னும் ஜப்பானிய மருத்துவம் பயின்ற இள மருத்துவன் தன்னுடைய பள்ளித் தோழனைக் காண வந்திருந்தான். வந்த இடத்தில் அவன் ஜென் சீடனாக இருக்கக் கண்டான். "ஜென் என்றால் என்ன?" என்று குஸூடோ கேட்டான். பள்ளித் தோழனோ,

"அதெல்லாம் உனக்கு என்னால் சொல்ல முடியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும், ஜென் குருவிடம் படித்தால் மரணம் பற்றிய பயம் அறுந்து போகும்", என்றான்.

"அப்படியா? எனக்கும் ஆசையாக இருக்கிறது. யாரிடம் கற்கலாம்?", என்றான் குஸுடோ.

"நான் - இன் என்று ஒரு குரு இருக்கிறார். அவரிடம் படிக்கலாம்", என்றான் தோழன்.

மறுநாள் காலை குஸுடோ ஒரு நீளமான பாம்பை மறைத்து எடுத்துக் கொண்டான். குருவிடம் காட்ட வேண்டும் அவர் பயப்படுகிறாரா இல்லையா என்று காண வேண்டும் என்பதே அவன் ஆசை.

ஆனால் நடந்தது என்ன?

மறு நாள் காலை குஸுடோ சென்ற போது குரு அவனைப் பார்த்தாரோ இல்லையோ?

மிகவும் மகிழ்ச்சியுடன், "வா! வா! வா! எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன? உன்னை எதிர்பார்த்து தான் காத்துக் கொண்டிருக்கிறேன்." என்றார்.

எனவே அவர் மேல் பாம்பைக் காட்டும் அவனது நோக்கம் பலிக்கவில்லை.

குஸுடோவால் எதுவுமே பேச முடியவில்லை. சிறிது நேரம் கழித்து, "நீங்கள் என்னைப் பார்த்ததே கிடையாதே?" என்றான்.

குரு, "அப்படியா?! உன்னைப் போல் ஒரு சீடன் எனக்கு இருந்தான். அவனோ என்று நினைத்தேன்!" என்றார்.

அன்று அவன் விடை பெற்று சென்று விட்டான்.

தினமும் காலையில் குஸுடோ வருவான். அவரைப் பார்ப்பான். அவர் ஜென்னைப் பற்றி எதுவுமே பேசவில்லை.

ஒரு வாரம் கழித்து குருவிடம், "ஜென்னைப் பற்றி படித்தால் மரண பயம் அற்று விடுமாமே?", என்றான்.

அதற்கு குரு என்ன சொன்னார் தெரியுமா?

குரு உடனே, "ஆமாம் மரண பயம் அற்றுத் தான் போகும்." என்றார்.

குஸுடோ, "எனக்கும் அதைக் கற்றுத் தாருங்கள்" என்றான்.

குரு, "நீ ஒரு மருத்துவன். உனக்கு வரும் நோயாளிகளை ஒழுங்காகப் போய் வைத்தியம் பார்" என்றார்.

குஸுடோ விடவேயில்லை. தொடர்ந்து பல முறை வந்தான். குருவும் இதே வாக்கியத்தை மீண்டும் மீண்டும் சொன்னார்.

குஸுடோ பொறுமையைக் கை விடவே இல்லை.

ஒரு ஆண்டு கழித்து, குரு, அலுப்புடன், "என்ன நீ! என்னைத் தொந்தரவு செய்து கொண்டே இருக்கிறாய்! போய் இந்த 'ஒன்றுமில்லை' என்னும் புத்தகத்தை ஒழுங்காகப் படி ஜென்னைப் பற்றித் தெரிந்து கொள்வாய்!", என்றார்.

குஸுடோ, 'ஒன்றுமில்லை' என்று தலைப்பிட்ட அந்தப் புத்தகத்தைக் குருவிலும் மேலாக மதித்து, வார்த்தை வார்த்தையாக 2 ஆண்டுகள் படித்தான்.

இந்த 2 ஆண்டுகளில் அவன் குருவைச் சந்திக்கவே இல்லை.

இரண்டு ஆண்டுகள் கழித்து குருவைப் பார்த்து அந்த புத்தகத்தைத் திருப்பி அளிப்பதற்காக வந்தான்.

குருவைக் கண்டான். இருவரும் ஒருவரை ஒருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக் கொண்டனர். அதிகம் பேசவில்லை. குருவால் சிரிப்பை அடக்க முடியவில்லை. குஸுடோவுக்கும் தான்.

புத்தகத்தைத் திருப்பியளித்தான். "ஜென்னைப் பற்றித் தெரிந்து கொண்டாயா?" என்று குரு கேட்டார். குஸுடோ மவுனமாய் இருந்து அது

உண்மை என்று நிரூபித்தான். "இனி உனக்கு மரண பயம் உண்டா?" என்றார் குரு. "இல்லை" என்றான் குஸுடோ.

"சரி. என்ன செய்யப்போகிறாய் இனி?" என்றார் குரு.

குஸுடோ சொன்னான், "நான் என் நோயாளிகளைக் கவனிக்கப் போகிறேன். என் மருத்துவத்தின் மூலம் நான் மரணத்தை ஜெயிப்பேன்." குரு, "அதைத் தான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன்!" என்றார்.

23. <u>எதைத் தூக்கி எறிவது?</u>

ஜோஷு என்னும் ஜென் துறவி தனது 60வது வயதில் தான் ஜென் தத்துவங்களைப் படிக்க ஆரம்பித்தார். தனது 80வது வயது வரை படித்தார். பின்னர் தான் காலமான 120ம் வயது வரை மற்றவர்களுக்கு அருளினார்.

ஒரு மாணவன், "குருவே, என் மனதில் எதுவுமே இல்லையென்றால் என்ன செய்வது?" என்றான்.

குருவோ, "அதைத் தூக்கி எறிந்து விடு", என்றார்.

மீண்டும் அவன், "என்னிடம் தான் எதுவுமே இல்லையே? எப்படித் தூக்கி எறிவது?" என்றான்.

குரு மீண்டும், "சரி. அப்படியானால் நீயே வைத்துக் கொள்" என்றார்!

24. <u>மெய்யறிவு</u>

ஒரு முறை ஒரு வயதான ஜென் துறவி, தனது சீடர்களை அழைத்து, ஒரு இளஞ்சீடனைக் குறிப்பிட்டு, அவன் மெய்யறிவு பெற்று விட்டதாகவும். ஜென்னைப் பற்றி முழுமையாக அறிந்து விட்டான் என்றும் கூறினார்.

சீடர்களுக்கோ மிகுந்த ஆச்சரியம். அவனை விட வயதிலும் அனுபவத்திலும் மூத்த சீடர்கள் பலர் அங்கிருந்தனர்.

சீடர்கள் அனைவரும், அந்த இளஞ்சீடனைப் பார்த்து, "நீ மெய்யறிவைக் கண்டு விட்டாயா?" என்று கேட்டனர்.

இளஞ்சீடனும், "ஆம். கண்டு கொண்டேன்." என்றான்.

சீடர்கள், ஆவல் மிகுதியில், "மெய்யறிவு பெற்ற அனுபவம் எவ்வாறிருந்தது?" என்றனர்.

இளஞ்சீடனோ, "எப்போதும் போல. அற்புதமாய்." என்று புன்முறுவலுடன் கூறினார்.

25. <u>பசியும் களைப்பும்</u>

ஒரு மாணவன் ஒரு துறவியிடம், "குருவே மெஞ்ஞானம் என்பது என்ன?" என்றான். குரு அவனிடம், "பசிக்கும் போது சாப்பிடுவது, களைப்பாக இருக்கும் போது தூங்குவது" என்றார்.